# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 106
தொலைபேசி எண். 2475 3001 நிகரி 2475 3300, 24751870
மின் அஞ்சல் tnsec@tn.nic.in இணையதளம் www.tnsec@tn.nic.in

---

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 6/2011** **நாள். 22 .09.2011**

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்கள் - 2011, 17.10.2011 மற்றும் 19.10.2011 ஆகிய நாட்களில் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. மாநிலத் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்விட்டது. மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் அயர்களால், ஊராட்சி வார்டு தேர்தல்களை நடத்துவதற்காக பள்ளி ஆசிரியர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களாகவும், வாக்குப் பதிவு செய்யும் அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உரிய தேர்தல் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்தருணத்தில் ஆசிரியர் பணியிட மாறுதலுக்கான கலந்தாய்வுக் கூட்ட நடவடிக்கைகள் மாவட்டங்களில் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையத்திற்கு தெரிய வந்துள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெறுவது குறித்து அறிவிக்கை வெளியிடப்பட்டுவிட்டதாலும், நன்னடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதாலும், பள்ளி ஆசிரியர்கள் இடமாற்றம் கலந்தாய்வுக் கூட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், இதுகுறித்து மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு உரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்றும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, பணியிட மாறுதலுக்கான கலந்தாய்வுக் கூட்ட நடைமுறைகள் / பணி மாறுதல்கள் ஆகியவை உள்ளாட்சித் தேர்தல்கள்-2011 நடைமுறையில் உள்ளவரை நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

(ஒம்) லோ.கிருஷ்ணமூர்த்தி,
மக்கள் தொடர்பு அலுவலர்